ADHIRIVALAI
# அதிரிவலை
கவுசானல் மாநில மாதச் செய்தி மடல்
மே 2026 | வலை 09 | பின்னல் 05

*"My soul glorifies the Lord, and my spirit rejoices in God my Saviour."* (Luke 1:46–47)



***Dear Brothers, Prayerful Greetings to you all in the sweet and most precious name of the Most Sacred Heart of***

WThe month of May is a grace-filled season that invites us to deepen our spiritual life and renew our commitment to our vocation. It is a time marked by significant celebrations that draw us closer to God while helping us reflect on the realities of our contemporary world. Although many events unfold globally, they affect us personally and communally. Hence, we are called to integrate our faith with life, remaining rooted in God while attentively discerning the signs of the times.

### The Silent Witness of Our Vocation

During this month, we are invited to rediscover the quiet strength and sacred depth of our vocation. Saint Joseph stands before us not through words, but through a life that was hidden, faithful, and fully surrendered to God's will. In the same spirit, our vocation as Religious Brothers is not defined by visibility but by fidelity.

Like Joseph, we are called to be "Brothers in the shadows," where our mission is rooted in Christ-centered service rather than self-promotion. The unnoticed duties, routine responsibilities, and simple acts of care we carry out each day are not insignificant; rather, they form the foundation of our holiness. Our work, whether manual, evangelical, educational, or social. It is never merely functional. When performed with love, it becomes sacred. In this way, our daily labour becomes a participation in God's creative work and a quiet collaboration with divine grace.

By living our vows faithfully, we reflect Joseph's trust and obedience. Without seeking recognition, we are called to protect, nurture, and serve the life entrusted to us, especially among the poor and the marginalized. Our Constitution reminds us that by embracing the hidden life of Nazareth, we enter into a spirituality where work itself becomes prayer. Let us therefore renew our commitment to serve with zeal, humility, and dedication, allowing our lives to become a silent proclamation of God's presence in the ordinary.

### The Ascension: A Call to Mission

As we celebrate the Ascension of our Lord Jesus, we encounter a profound moment of transition that is both joyful and challenging. While Christ departs from our sight, He becomes more deeply present through the Holy Spirit. This mystery reminds us that our humanity is not confined to earthly realities but is elevated in Christ to share in divine life.

The Ascension is not an invitation to remain passive or to dwell in longing; rather, it is a call to mission. The Lord entrusts His work to us. As Religious Brothers, we are sent to witness not through prominence or recognition, but through quiet courage and faithful service. We are called to move forward with attentive hearts to serve generously, to pray deeply, and to become living signs of Christ's presence in the world.

### Pentecost: Life in the Spirit

The feast of Pentecost celebrates the outpouring of the Holy Spirit upon the Church, transforming fear into courage and silence into proclamation. From the beginning of creation, the Spirit of God has been active and bringing life and order. The same Spirit overshadowed Mother Mary, descended upon Jesus at His baptism, and filled the Apostles in the upper room.

Pentecost reminds us that our vocation is sustained not by our own strength but by the Spirit who dwells within us. As Religious Brothers, we are called to be inwardly rooted in Christ and outwardly engaged in mission. The Spirit renews and strengthens us and bringing freshness where there is routine, strength where there is fatigue, and courage where there is fear.

## Provincial's Programme
### May 2026

| | | |
|---|---|---|
| 01 | **PALAYAMKOTTAI** | *Jubilee Function* |
| 02 | **PALAYAMKOTTAI** | *FSH Golden Jubilee Celebration* |
| 03 | **BUDHAPADI** | *Jubilee Function* |
| 06 | **TRICHY** | *Jubilee Function* |
| 07-10 | **PROVINCIALATE** | *Province Consult Meeting* |
| 11 | **RAMNAD** | *Jubilee Function* |
| 13 | **SALEM** | *Marriage Function* |
| 14 | **TRICHY** | *Jubilee Function* |
| 15 | **MADURAI** | *Meeting.* |
| 18 | **MICHAEL PALAYAM** | *Marriage Function* |
| 20-22 | **YERCAUD** | *TARB Meeting* |
| 22 | **TRICHY** | *Jubilee Function* |
| 30 | **KALIAKAVILAI** | *Jubilee Function* |

## Important Days / Events

- 01 - JUBILEE & FINAL VOWS
- 02 - FSH GOLDEN JUBILEE CELEBRATION
- 13 - FEAST OF OUR LADY OF FATIMA



## THE POPE'S Monthly Prayer Intention

**THAT EVERYONE MIGHT HAVE FOOD**

**Let us pray that everyone, from large producers to small consumers, be committed to avoid wasting food, and to ensure that everyone has access to quality food.**

## Thought of the month

"The greater part of our happiness or misery depends on our disposition and not our circumstances."

– Martha Washington

Let us open our hearts to the Holy Spirit, allowing Him to purify our intentions, deepen our fraternity, and energize our service. May our lives reflect joy, unity, and quiet strength as we bear witness to Christ.

### May: Devotion to the Blessed Virgin Mary

The month of May is traditionally dedicated to our Blessed Mother Mary, whom we honour especially through the recitation of the Holy Rosary. Our Constitution reminds us: "We cultivate a special devotion to the Blessed Virgin Mary, the exemplar and model of consecrated life" (Cons. 61).

In praying the Rosary, we do not pray for ourselves alone, but for the entire human family. This is reflected in the Word of God and word of God is fulfilled in Holy Rosary: **"For He has looked with favour on the lowliness of His servant. Surely, from now on all generations will call me blessed" (Lk 1:48).**

Similarly, in the "Our Father," we pray in the plural, "Give us our daily bread" and "forgive us our trespasses." In the "Hail Mary," we say, "pray for us sinners." Christian prayer, therefore, is always communal and inclusive. Hence, whether I recite the Holy Rosary personally or in community, I am called to remember that I pray not only for myself but for all. This is the beautiful and universal dimension of the Rosary. Let us, therefore, entrust all people to the loving intercession of the Blessed Virgin Mary.

### Prayer for the World and Community

In today's world, tensions, conflicts, and wars continue to cause suffering, particularly among the poor and vulnerable. This situation calls us to a renewed commitment to prayer and both personally and as a community. Let us make it our priority to pray for peace in the world, justice for the oppressed, and healing for those who suffer.

### Fraternal Joy and Remembrance

During this month, we joyfully congratulate our Brother who has professed his perpetual vows. We also give thanks to God for those celebrating their Silver and Diamond Jubilees, and we extend our prayerful wishes to those celebrating their birthdays. At the same time, we remember with gratitude our departed Brothers who have entered eternal life. May the Lord grant them everlasting peace.

### Conclusion

Dear Brothers, the month of May invites us to deepen our prayer, strengthen our fraternity, and renew our sense of mission. Let us not keep the gift of the Spirit hidden, but allow it to shine through our lives in service, love, and faithful witness. May our lives proclaim, even without words, that Christ is alive and active among His people.

Let us journey together with Mary, through Christ, in the Spirit.

Fraternally in Christ,

**Br. A. Stephen Arockiasamy, SHJ**

*Provincial Superior*

## FSH Meeting









The FSH Prayer Meeting was held at Suhalayam on 24th April 2026. The Eucharistic Adoration was led by Br. Lourdu Kulandai and Br. K. P. Ravi. A large number of FSH members actively participated in this prayerful gathering on the last Friday of April. The programme was well organized by Br. A. Arulsamy, making the event spiritually enriching and meaningful for all who attended.

# அன்புக்கு ஆராதனை

பூக்கின்ற மலர்கள் எல்லாம் பூஜை மலர்கள் ஆவதில்லை. வரும்முன் சில வாடி விடுகின்றன. வரும் வழியில் சில தவறி விடுகின்றன. சில வஞ்சிகளின் கூந்தலை அலங்கரிக்கச் சென்று விடுகின்றன. சில பூக்களே ஆண்டவனுக்காய் பிறந்து, அர்ச்சனைக்காய் மலர்ந்து, இறைவன் பாதத்தை இறைபணியில் அலங்கரிக்கின்றன. நிரந்தர அர்ப்பணமாக இருபத்தைந்து, ஐம்பது, அறுபது ஆண்டுகளைக் கடந்து ஆண்டவரின் மலர்களாக அர்ப்பணத்தை அலங்கரிக்கும் இதய சபைத் தோட்டத்து இனிய மலர்களின் சுவடுகளைப் பற்றி இதயம் திறக்கிறேன்.


## அருட்சகோ.S. ராயப்பன் SHJ




இதயம் கவர்ந்த இனியவர் ஐயா ராயப்பன் அவர்கள். ராஜ கெம்பீரத்தில் திரு. செங்கோல், திருமதி. சூசை அம்மாள் தம்பதிகளுக்குப் பிறந்த இயேசு ராஜாவின் இனிய தளபதி. இதய சகோத சபையில் இளவல்களை உருவாக்கிய இனிய அதிபதி. கல்விப்பணி உருவாக்குதல், இசை, பாடல்கள், இல்லங்களை வழி நடத்துதல் என அத்தனை பொறுப்புகளிலும் முத்திரை பதித்த வித்தகர். இதய சபையில் எத்தனையோ விவேகானந்தர்களை உருவாக்கி, பக்தியில் முக்தியை கண்ட நவீன குரு. எதார்த்தவாதி. யாருக்கும் தீங்கிழைக்காத இனிய சன்யாசி. அவரது உதடுகள் உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு உற்சாகத்தைத் தரும். காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வதோடு காலத்தின் தேவைக்கு ஏற்ப சகோதரர்களை உருவாக்கித் தந்த வித்தகர். இவர் தத்துவம் பேசி தடம் காட்டியவர் அல்ல சத்தியம் பேசக் கற்றுக் கொடுத்தவர். மவனே என்று அழைக்கும் அந்த மந்திர சொல்தான் இன்றும் அவரது இதயத்தில் இளவல்களைக் கட்டிப் போட்டிருக்கிறது. இதயம் கனிந்த எங்கள் ஐயாவிற்கு இனிய வைரவிழா வாழ்த்துகள்.

## அருட்சகோ.P. சதானந்தம் SHJ

திரு. பல்தசார் திருமதி. வேதமேரி இவர்களின் மூன்றாவது முத்து இவர். பகைக்குஅஞ்சான் ஊரில் பிறந்ததால் இவரைப் பகைப்பதற்கு யாரும் அஞ்சுவார்கள். இவரது சிரிப்பு எதிரியையும் சிறைப் பிடித்து விடும். கள்ளம், கபடம் இல்லாத வெள்ளை உள்ளம் படைத்தவர். மின் சாதனங்களை எல்லாம் தன் சாதனைக்குப் பயன்படுத்தியவர். இவர் உத்தரவிட்டால் உருகிப் பேசிவிட்டால் உலகச் சந்தையும் தன் விலையைக் குறைத்துக் கொள்ளும். மனம் விரும்பிய மக்கள் தொடர்பாளர். கல்விப் பணியில் கணக்கற்ற சாதனைகளைச் செய்ததால் இன்று பல சாதனைப் பக்கங்களை தன் சட்டைப் பையில் வைத்திருக்கிறார். விமர்சித்தவர்கள் வியந்து போகும் அளவிற்கு இவரது பணியின் பக்கங்கள் பரவிக் கிடக்கும். கொஞ்சும் தமிழ், இவர்கூடவே நடக்கும். எதிரிக்கும் நல்லது நினைக்கும் இளகிய மனதுக்காரர். இவருக்கு தெரியாத மனிதர்களே இல்லை. புரியாத பாஷைகள் இல்லை. பலரின் உள்ளம் கவர்ந்த கள்வன். உலகத்திற்கே சிறந்த நண்பன். உங்களுக்கு எங்களின் இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.




## அருட்சகோ.S. மதலை முத்து SHJ




திரு.சிங்கராயர் திருமதி.பிலோமினாள் இவர்களின் முத்துப்பிள்ளை. செல்லியம்பட்டி தந்த செல்லப்பிள்ளை. மதலை முத்து எப்போதுமே மனம் கவர்ந்தவர்களின் சொத்து. தனக்கென்று எந்த ஆசையையும் வளர்த்துக் கொள்ளாமல் சபை கட்டளையிடும் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். எந்த பணி கொடுத்தாலும் வாதாடாமல் முகம் சுளிக்காமல் கொடுத்த பணியை பலர் பாராட்டும் படியாகச் செய்து முடிப்பவர். தனக்கென்று எதனையும் தேடாமல் தன்னை எதிலும் முன்நிறுத்தாமல் சபைக்கு எதுவென நினைக்கிறீர்களோ அதில் தன்னை இணைத்துக் கொள்கிறேன் என்று தன்னை முழுவதுமாய் அர்ப்பணித்த நல்ல சகோதரன். கடும் உழைப்பு இவரது கைவந்த கலை. அதனால் தான் இவர் சபைக்கு ஏற்றவர். சபை இவரை பெற்றதால் பெரும்பேறு அடைந்திருக்கிறது. உளளூர் வெளியூர் பணிகளில் தன்னை உடைத்துக்கொண்டு இந்த சமுதாயத்திற்கு உயிர் கொடுத்த சகோதரனை வாழ்த்துவோம். அன்பு சகோதரருக்கு இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.

## அருட்சகோ.S. அருள்சாமி SHJ

திரு.சவரியப்பன், திருமதி.பிலோமினாள் தம்பதியின் தவப்புதல்வன். செல்லியம்பட்டி தந்த செல்லப்பிள்ளை. எல்லோருக்கும் நல்லபிள்ளை. மூத்தோர்களை மதிப்பதும், முக மலர்ச்சியோடு சிரிப்பதும், கொடுத்த பணி சிறப்பாகச் செய்வதும், கோபப்படாமல் யாவரையும் வழிநடத்துவதும் இவருக்குக் கைவந்த கலை. நட்பு எப்போதும் இவர் நெஞ்சில் நர்த்தனமிடும். புகழைக் கண்டு மயங்கியதும் இல்லை. இகழைக் கண்டு ஒதுங்கியதும் இல்லை. கொடுத்தாலும் பறித்தாலும் எவரையும் இகழ்ந்து பேசுவதும் இல்லை. நல்லவர்களுக்கெல்லாம் நம்பிக்கை நட்சத்திரம் இவர். கொடுத்த பணிகளில் எல்லாம் முத்திரை பதித்தவர். கொடுத்த வாய்ப்புகளில் எல்லாம் தன்னையும், சபையின் புகழையும் நிலைநிறுத்தியவர். சரித்திர நாயகனுக்கு எங்களின் இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.






### அருட்சகோ.A. சகாய ஜெயக்குமார் SHJ

திரு.அருளப்பன் திருமதி.சபரியம்மாள் தந்த அற்புத விளக்கு சகோ. சகாய ஜெயக்குமார். மலைக்கோட்டை தந்த மாணிக்கம், யாவரும் மலைத்துப் போகும் அளவிற்கு தமது வாழ்க்கைத் தடத்தை அமைத்துக் கொண்டவர். சகோதரத்துவ வாழ்விலும் பணியிலும் சலனம் இல்லாமல் கடந்து போகும் மௌன குரு. எதிரிகளும் மயங்கிப் போகும் அளவிற்கு இவரது சிரிப்பு எப்போதும் முகம் முழுவதும் மலர்ந்து நிற்கும். கடுஞ்சொல் கண்டறியாதவர். சுடு சொல்லை தொட்டு விடாதவர். குழந்தை உள்ளம் கொண்டவராக இருப்பதால் குழந்தைகளோடு தான் இவரது பணியும் பவனி வந்து கொண்டிருக்கிறது. சிரிப்பால் ஊக்கத்தையும், மௌனத்தால் தாக்கத்தையும் எவருக்குள்ளும் கடத்தி இனிய பாதை காட்டுபவர். குழந்தை மனம் படைத்தவருக்கு இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.

### அருட்சகோ.S. ஜெயராஜ் SHJ




திரு.சூசை மாணிக்கம், திரு.பெரியநாயகம் இவர்களின் இரண்டாவது புதல்வன் இவர். பூதப்பாடி ஊரின் மண்ணின் மைந்தன். தமிழில் கவி பாடிய நவீனப் புலவன், இவர் பேச்சு தித்திக்கும் நகைச்சுவை, நட்பு வட்டத்தைப் பெருக்கும் இவரோடு இருப்பது எவ்வளவு மகிழ்ச்சி என்று பல இதயங்களுக்குப் புரியும். தெற்கே வடக்கே என்று இவர் தேடித் தேடியே பணிகள் செய்து கொண்டிருந்தார். தமிழை அமுதாகத் தன் குழந்தைகளுக்கு ஊட்டியவர். வாதாடவும் மாட்டார், போராடவும் மாட்டார். வாழ்க்கைக்கு உள்ளத்தில் மட்டும் வழிகாட்டுபவர். நண்பர்களுக்காக எதையும் செய்வார். சொகுசான வாழ்க்கையைத் தேடமாட்டார். சுகமான பயணத்திற்கு ஆசைப்படுவார். இதயம் கனிந்த வெள்ளிவிழா வாழ்த்துகள்.




### அருட்சகோ. ஆல்பர்ட் சேவியர் SHJ

திரு. ஆல்பர்ட் திருமதி. லூசியாள் பெற்றெடுத்த ஐந்தாவது புதல்வன் இரவிபுத்த துறையில் பிறந்ததால் இறைவனுக்கே இவரை தத்துக் கொடுத்து விட்டார்கள். பள்ளிப்பருவத்தில் சுட்டி பிள்ளை. கால்பந்து விளையாடுவதில் கெட்டிக்கார பிள்ளை, நாலடியில் பிறந்த நக்கீரன் எவரையும் எதிர்த்துக் கேட்கத் தயங்கமாட்டார். இளைஞர்கள் உலகத்தில் இதயத்தில் குடியிருப்பவர். வெளிநாடுகள் பலவற்றில் இதய சபையில் விருட்சமாக நின்று, விவிலிய மரபுகளையும், மதிப்பீடுகளையும் விதைத்து விட்டு வந்தவர். சபையின் பொது நிதியர். மூத்தோர்களை மதிப்பவர். யாருக்கும் இறங்கி உதவி செய்யக் கூடியவர். ஓரிடத்தில் இல்லாமல் ஓடிக்கொண்டே இருப்பவர். பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து பழகியவர். இனிய இதயமே எங்களின் வெள்ளிவிழா வாழ்த்துகள்.

### அருட்சகோ.J. மரிய ஆரோக்கியம் SHJ




திரு. சேசு, திருமதி. மரிய ஆரோக்கியம் இவர்களுக்கு மகனாக பிறந்தவர். மரியராயபுரத்தில் பிறந்த மரிய ஆரோக்கியம், மரியாதைக்கு உரிய ஆரோக்கியம். இவரது செயல்களை பார்த்து எத்தனையோ சிம்மாசனங்கள் இவரை தேடி வந்தன. எதற்காகவும் சத்தியம் மாறும் எந்தப் பாதையோடும் சமரசம் செய்து கொள்ளமாட்டார். கல்விப் பணியில் இவரது சாதனைகள் கணக்கற்றவை. தவறு என்று தெரிந்துவிட்டால் எதற்கும் அஞ்சாமல் அசராமல் துணிந்து போராடுபவர். இதய சபையின் உயிர்ப் போராளி இவர். வஞ்சகம் என்பது இவரது வாழ்வில் வராத ஒன்று. எந்தப் பயமும் அறியாத பாமரன் இவர். எளிய மனிதர், எதைக் கண்டும் இதயம் இளகும் இரக்கக்குணம் கொண்டவர். நீதியும் அன்பும் இவரது நெஞ்சுக் கவசம். இவரைச் சரியாக பயன்படுத்தாமல் விட்டால் சரிவுதான். இவரிடம் தஞ்சம் அடைந்தவர்கள் உண்மையாக உழைப்பார்கள். எந்த தலையையும் கொடுத்துக் காப்பாற்றுபவர் கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது இவர் கடந்து வந்த பாதை. இம்மட்டும் கைவிடாத தேவன் இனியும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையோடு நடப்பவர். நல்லதே நடக்கும் என்று நினைப்பவர், நல்லவரே உங்களுக்கு எங்களது இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.




### அருட்சகோ. C.M பெலிக்ஸ் SHJ

திரு. மதலைமுத்து திருமதி. மோட்சராக்கினியின் இரண்டாவது மகன். தாசரப்பள்ளி தந்த தவப்புதல்வன். தச அவதாரமும் எடுத்த தனி முதல்வன். ஆசிரியராக முதல்வராக உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி என பாகுபாடு இன்றி வரலாற்று ஆசிரியராக வலம் வந்தவர். எந்த களமாய் இருந்தாலும் முத்திரை பதிக்கும் வித்தகர். நட்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர். எதார்த்தமாய் வாழும் இனியவர். சத்தமாக பேசுவார். சுத்தமாக வாழுவார். சென்ற இடமெல்லாம் சபைக்கும் சகோதரத்துவத்திற்கும் பெருமை சேர்த்தவர். ஏற்ற இறக்கம் எதுவும் பார்க்காமல், விருப்பு வெறுப்பு எதற்கும் கலங்காமல். விமர்சனத்தை கண்டு ஒதுங்காமல், மீண்டும் மீண்டும் பூரித்து வரும் பீனிக்ஸ் பறவை இவர். சிறந்த தொண்டு ஆற்றும் இந்த தூயவனுக்கு இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.




## அருட்சகோ.M.D. விஜோ SHJ

திரு. தேவசி திருமதி.அல்போன்சா இவர்களின் இரண்டாவது புதல்வன். இந்த வீஜோ மலையாளக் காற்று இங்கு தமிழ் பேசுகிறது. மஞ்சப்பாறா என்ற மலையாள மண்ணில் இருந்து தோன்றிய இந்த இறைவனின் வித்து தமிழ் மண்ணில் தளிர்க்க ஆரம்பித்தது. தமிழ் மட்டுமல்ல ஆந்திரா, தெலுங்கு என்று இந்த தெய்வீக தென்றல் தேவையில் இருக்கும் இலக்கு மக்களுக்கு ஒரு விடியலை கொடுக்க தேடித்தேடி சென்று தன் பணியைத் தொடர்ந்தது. கொடுக்கப்பட்ட பணிகளில் எல்லாம் கொள்கை வீரமும், ஒதுக்கப்பட்ட மக்களைக் கண்டால் நெஞ்சில் ஈரமும் கொண்டு பணி வாழ்வில் பவனி வந்தார். நண்பர்கள் பலம் அதிகம். அதிலும் நம்பிக்கை வைத்தவர்களோடு கடைசி வரை நின்று கரை சேர்க்கும் கற்பக விருட்சம். களங்கம் இல்லாது பணி செய்யும் கடவுளின் தாசனே உங்களுக்கு இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.

## அருட்சகோ.I. ஸ்டீபன் சவரிராஜ் SHJ




திரு. இருதயராஜ் திருமதி. சுசிலா தம்பதிகளின் இளைய புதல்வன். கலைகள் பலவற்றிலும் வெளுத்துக்கட்டும் களத்துப்பட்டிக்காரன். ஆங்கிலப் புலமையில் தனித்தமிழை தவழவிடுபவன். தலைமை பொறுப்பிற்குத் தனி இலக்கணம் தந்தவர். இவர் கையில் தவழ்ந்த நிறுவனங்கள் எல்லாம் இன்று கலங்கரை விளக்காகக் காட்சியளிக்கிறது. தலக்கணம் இல்லாத தமிழ் கவிதை. வறுமையிலும் வளமையிலும் வாழத் தெரிந்த நவீன சந்நியாசி. ஆஞ்சலோ மாநிலத்தின் அரியனையை அழகு படுத்தி கொண்டிருப்பவர். நட்புக்கு உயிர் கொடுப்பவர். கற்புக்கு வழி அமைப்பவர். வலிக்காமல் தன்வார்தையால் யாரையும் தன் வழிக்குக் கொண்டு வருபவர். எதைக் கண்டும் கலங்கிப் போக மாட்டார். செய்வது தவறு என்றால் சிவனோ, அல்லது எவனோ சீர்படுத்தாமல் விடமாட்டார். மூத்தோரை மதிப்பார். தன்னை ஏற்றோரைச் சுமப்பார். நட்புக்கு மட்டுமல்ல தம்மை நம்பிய அனைவரையும் கைவிடமாட்டார். எச்சூழலிலும் எதற்கும் கலங்காத இதயச்சுடரே, உங்களுக்கு இனிய வெள்ளிவிழா வாழ்த்துகள்.



சகோ.சகாயராஜ்

## நிரந்தர வார்த்தை பாடு


திரு. சவரியப்பன் திருமதி. மரிய செல்வம் அவர்களின் தவப்புதல்வன். காவேரி புரத்திலிருந்து கடவுள் கண்டெடுத்த காரியதரிசி. இளமையை இறைவனுக்கு அளித்து இன்பம் காணும் இனிய இளவல் தன்னை மறந்து தன்னிலை உணர்ந்து இறைவன் பணிக்காய் தன்னை நேர்ந்து விடுவதோடு இறுதிவரை இறைவன் பணிக்காய் முழுமையாய் ஒப்படைக்க முன்வந்துள்ளது. உலகம் என்ற மாயையில் உறையாமல், கவர்ச்சி என்ற மாய வலையில் சிக்காமல், நாகரிகம் என்ற கிளிசலில் தன்னை இழக்காமல், நவீன பொருட்களிள் என்ற போதையில் தன்னைச் சிதைக்காமல், இறைவன் வரைந்த ஓவியமாக, இறைமக்கள் மனதில் நிறைந்திருக்கும் காவியமாக, இறை பீடத்தில் மலரத் துடிக்கும் இனிய சகோதரனே உங்களுக்கு எங்களின் இனிய வாழ்த்துகள்.

## நிறைவாக..

நல்லவர்களே நாதன் இயேசுவின் இறைவழியில் இதய சபையில் பயணிக்கும் எனது அருமை சகோதரர்களே காலம் தொடுக்கும் கேள்விக்கு ஏற்ப கடமை செய்யப் பணிக்கப்பட்டுள்ளீர்கள். அழைப்பு என்பது நமக்குப் பிழைப்புக்குக் காட்டிய வழி அல்ல, நமது உழைப்புக்கு விட்ட சவால் இதனை நன்கு உணர்வோம்.

**எரியும் நெருப்பில் மோயிசனையும், இடியின் ஒளியில் சின்னப்பனையும்**
**வீசும் காற்றில் எலியாசையும், ஆர்ப்பரிக்கும் கடலில் சீடர்களையும்**

அழைத்த இறைவன் உங்களையும் என்னையும் இக்காலத் தேவைக்காக அழைத்துள்ளார். இறைவன் வகுக்கும் புதிய பாதைக்கு நம்மை சல்லிக்கல்லாக அல்லாமல், சலவைக் கல்லாக இட்டு இறையரசை எழுப்ப எண்ணிக் கொண்டிருக்கிறார். இந்த அழைப்பு மட்டும் இல்லாது போனால் ஆதிக்காலம் மட்டுமல்ல மீதிக் காலமும் சூனியமாக்கப்பட்டிருக்கும். ஆகவே சகோதரர்களே நமக்கு இருக்கும் ஒரே சவால் இந்த நாகரிக உலகில் போட்டி பொறாமைகளுக்கு மத்தியில் எல்லோருக்கும் சகோதரர்களாய் வாழ்வதுதான். வாருங்கள் சகோதரர்களே நம் சாதனைகளின் உச்சம் எச்சுழலிலும் எல்லோருக்கும் சகோதரர்களாய் இருப்பதுதான். சகோதரர்களாய் வாழ்வோம். சகோதரர்களுக்காய் வாழ்வோம். சகோதரத்தை வளர்க்க வாழ்வோம். வாருங்கள் இணைவோம். இறையரசு மலரட்டும், இதய சபை வளரட்டும்.



# நீரளவே நீராம்பல்



## அருட்சகோ. I. பங்கிராஸ் தி.இ.ச

மண்ணில் 10-02-1948 விண்ணில் 16-04-2026

**பிறப்பும் வளர்ப்பும் :-**
திண்டுக்கல் மறைமாவட்டம் கொசவப்பட்டி என்ற பசுமை கிராமம் தேவ அழைத்தலின் அமோகவிளைச்சல் நிலமாகும். அக்கிராமத்தில் திரு. இன்னாசி திருமதி. சூசையம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தார் சகோ. I. பங்கிராஸ். ஜோசப் என்ற அண்ணன், மாசிலாமணி, மோட்சமேரி என இரண்டு அக்காள், மரிய செல்வம் என்ற அருமைத் தங்கை, இவர்களோடு அன்பிலும் பாசத்திலும் இறை பக்தியிலும் வளர்ந்து வந்தார். திருச்சி R.C பள்ளியில் கல்வி பயின்றார். இவரோடு வகுப்புத் தோழனாகப் பயின்றவர் மதுரை மேனாள் பேராயர் அந்தோனி பாப்புசாமி. தட்டச்சு கல்வியில் தமிழ், ஆங்கிலம் இரண்டு பிரிவிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று, தொழிலாசிரியர் தேர்விலும் வெற்றி பெற்றார். அப்போது அவர் 26 வயதைக் கடந்திருந்தார். முன்னாள் அருட்சகோ. பீட்டர்ராய் இவரை சந்தித்து சபைக்கு அழைத்துள்ளார். மனமுவந்து சபையில் வந்து சேர்ந்தார். தேர்வுநிலை, நவதுறவு பயிற்சி முடித்து முதல்வார்த்தைப்பாடு கொடுத்தபோது வயது 30. உடன் பயிற்சி பெறுபவர்களை விட வயது கூடுதலாக இருந்தாலும். எல்லோரோடும் இனிமையாகப் பழகி, இரண்டறக் கலந்து, ஒன்றாய் சங்கமித்தார்.

**பெருமைக்குரிய பெரியவர்:-**
அக்காலத்தில் நவ துறவிகளை வெளிப்பணிகளுக்கு அனுப்புவதில்லை. இவரது தட்டச்சுத் திறமையை அறிந்த மேனாள் பொதுச் செயலர் சகோதரர் S. செபஸ்தியான், சபை அதிபர் சகோதரர் A. அருள் பிரகாசத்திடம் நவதுறவு மேலாளர் சகோதரர் V.சுவாமிநாதனிடம் சிறப்பு அனுமதி பெற்று, கிறிஸ்துவில் வாழ்வு மற்றும் கவுசானல் உரைநடைகள் தயாரிப்பது சார்ந்த பணிகளுக்காக அவ்வப்போது மாலையில் சகோதர கல்வி கழகம் சென்று தட்டச்சுப் பணிகளை செய்து கொடுத்தார். பொதுவாக சகோதரர்கள் நவதுறவு பயிற்சி முடித்து பல்கலைக்கழக பட்டங்கள் பெற்று பள்ளிகளில் பணிபுரியும் போதுதான் சபைக்கு வரவு ஈட்டி தருவார்கள். ஆனால் சகோ. பங்கிராஸ் அவர்கள் நவதுறவு காலத்திலேயே சபைக்கு வருமானம் ஈட்டி தந்த பெருமைக்குரிய பெரியவர்.

இவர் பணியாற்றிய முதல் பணித்தளம் இராயப்பன்பட்டி. அங்குள்ள புனித அலோசியஸ் மேல்நிலைப் பள்ளியில் தட்டச்சு கற்றுத் தரும் தொழிலாசிரியர். அந்நாட்களில் அங்கிருந்த குழுமம் மிகவும் ஆனந்தமான குழுமமாக இருந்தது. நானும் சகோ. பெலிக்ஸ் (தற்போது ஆந்திராவில் அருட்தந்தை) சகோ.அருளானந்தம் (தற்போது MSFS அருட்தந்தை) குற்றால மருத்துவர் S. ஆரோக்கியம், இதய வேந்தன் S. அகஸ்தீன். எங்கள் மத்தியிலே சகோதரர் பங்கிராஸ் மிகச்சிறந்த முன் மாதிரிகையாய் நடந்து கொள்வார். ஞான முயற்சிகளிலும் பள்ளி சார்ந்த கடமைகளிலும் பிரமாணிக்கமாய் இருப்பார். மிகவும் வெளிப்படையாக பேசுவார். உண்மை என்றால் உண்மை, தவறு என்றால் தவறு என்று சொல்லக்கூடிய நடுநிலை தவறாத எதார்த்தவாதி. நகைச்சுவைகளை கேட்டு வாய்விட்டு சிரிப்பார். திறமை மிக்க மாணவர்களை பாராட்டி உற்சாகப்படுத்தி இன்னும் ஒரு படி உயர வழி காட்டுவார்.

**மகிழ்ந்திடாய் மாநிலமே:-**
உசிலம்பட்டியில் இருந்து கம்பன் என்ற மாணவன் இவரிடம் தட்டச்சு படித்தான். மிகக் குறுகிய கால வரையறையில் தட்டச்சு கல்வியில் மின்னல் வேகத்தில் செயல்பட்டு அரசுத் தேர்வில் அந்த மாவட்டத்திலேயே முதலிடம் பெற்று நம் சகோதரருக்கும், பள்ளிக்கும் பெருமை தேடித் தந்தான். சகோதரர் பங்கிராஸ் தட்டச்சு ஆசிரியராக பணியாற்றும் வகுப்பறை காட்சியை "ஒளியை ஏற்றுவோம்" என்ற சபை வரலாற்று நூலில் 129 ஆம் பக்கம் காணலாம். தட்டச்சு ஆசிரியராக இருந்து கொண்டே தொலைத்தொடர்பு கல்வி மூலம் வரலாறு பாடத்தில் M.A. B.Ed பட்டம் பெற்றார். தூத்துக்குடி புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியில் முதுகலை ஆசிரியராகவும், தொடர்ந்து பணகுடி திரு இருதய மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி பணி நிறைவு பெற்றார். ஒரு தட்டச்சு ஆசிரியராக பணி துவங்கியவர் கவுசானல் மாநில அதிபராக 2012 முதல் 2015 வரை பணியாற்றும் பொறுப்பின் உயரம் கண்டார். சபை தந்த வாய்ப்புகளையும் அனுமதிகளையும் பயன்படுத்தி தன்னார்வம், விடாமுயற்சி, கடின உழைப்பின் மூலம் கல்வியிலும் சேவையிலும் தன்னை உயர்த்தி கொண்டார். "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்பார்கள். நம் சபையின் நீராம்பல் மலராக உயர்ந்து மலர்ந்தார் சகோதரர் பங்கிராஸ்.

**"மகிழ்ந்திடாய் மாநிலமே**
**உந்தன் மைந்தனின் மாட்சியிலே**
**இன்று பேரருள் வாய்ந்தது சகோதரத்துவத்தால்**
**என்று புகழ்ந்திடாய் திருமறையே"**



**பொறுப்புமிக்கப் பணிகள் :-**

நம் சபையின் பொறுப்புமிக்கப் பணிகளில் நேர்த்தியாக செயல்பட்டார். இருதயகுளம், பணகுடி, குறிச்சி பள்ளிகளில் இல்லத்தலைவர், தாளாளர் மற்றும் விடுதிக்காப்பாளர், சகோதரர் கல்விக் கழகத்தின் செயலர், இளம் சகோதரர்களின் உருவாக்குனர் என அனைத்துப் பணிகளிலும் தனக்கென தனி முத்திரையை பதித்தவர். இவர் பணகுடியில் இல்லத்தலைவராகப் பணியாற்றிய போது மேல்நிலைப் பள்ளிக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் நீண்ட நெடிய ஆண்டுகளாக பயன்பாடு இன்றி கிடப்பதையும் இதனால் அங்கே நில ஆக்கிரமிப்பு ஏற்படுவதையும் கண்டு வருந்தினார். இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என அன்றைய மாநில அதிபர் பேரருள் சகோ. J. கஸ்மீர் ஐயா கவனத்திற்கு கொண்டு சென்றார். சகோ. J. கஸ்மீர் மற்றும் சகோ I. பங்கிராஸ் இருவரது பெயரையும் காலத்திற்கும் பிரகடனம் செய்யும் பள்ளியாக அங்கே CBSE ஆங்கில வழிப்பள்ளி இயங்குகிறது.

**கடலளவும், கையளவும்:-**

இவர் மாநில அதிபராகப் பணியாற்றிய காலத்தில் அனைத்து இல்லங்களுக்கும் பயணம் சென்று, சகோதரர்களைச் சந்தித்து, அவர்களோடு தங்கி, உறவாடி மாநில நிர்வாகத்தின் செயல்பாடுகளை முழு வீச்சில் கொண்டு சென்ற அவர், தமது பணிக்காலம் முடிந்ததும் எவ்வித பணிகளும் இல்லாமல் பணகுடிக்கு மாற்றப்பட்டார். மறுநாளே பெட்டி படுக்கையுடன் மகிழ்ச்சியாய் வந்து இறங்கினார்.

**"கடலளவு கிடைத்தாலும் மயங்க மாட்டேன்.
அது கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன்.
உள்ளத்தில் உள்ளது தான் உலகம் கண்ணா"**

என்ற கவியரசரின் வார்த்தைகளை வாழ்ந்து காட்டியவர். உளவியல் சார்ந்த நூல்களை விரும்பி வாசிப்பார். இயற்கை அழகை வியந்து ரசிப்பார். அதிகாலையில் தவறாமல் திருப்பலிக்கு செல்வார், பணகுடி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி காண்பது உன்னத இறைஅனுபவம் என்பதை இதயப்பூர்வமாக உணர்ந்திருந்தார். மாலையில் காலாற நடந்து சென்று புண்ணியவாளன் புறத்தில் உள்ள மாதா கெபியில் செபமாலை செபித்து வருவார். காலை மாலை குழும செபத்தில் முன்னிலை வகித்து வழிநடத்துவார்.

**உறக்கமில்லாத இரவுகள்:-**

நவ துறவு பயிற்சியில் அவர் இரண்டாம் ஆண்டு, நான் முதல் ஆண்டு. அன்று எங்களுக்குள் ஏற்பட்ட அன்பும் நட்பும் எங்கள் வாழ்வின் வழிநெடுகிலும் எவ்வித தேய்மானம் இன்றி வளர்மதியாய் நிலை பெற்றது. அவர் நெல்லை கிட்னிகேர் மருத்துவமனையில் இருந்தபோது பார்க்கப் போனேன். மனம் விட்டு பேசலானார். சபையின் மாண்பு, மகத்துவம், அண்மைக்கால வளர்ச்சிகள் பற்றி பெருமையாய் பேசினார். தன் வாழ்வில் தான் அடைந்த உன்னதங்கள், செய்த சாதனைகள் பற்றி மகிழ்வாய் குறிப்பிட்டார். இதய அறுவை சிகிச்சை மற்றும் தற்போதுள்ள தரமான சிகிச்சைகள் பற்றி நன்றியாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசுகையில், கிளை இல்லங்களில் வாழ்ந்த போது காரணமே இல்லாமல் தனக்கு வந்த அவமானங்கள், புறக்கணிப்புகள், நேருக்கு நேர் மோதல்கள், அதனால் உண்டான மன உளைச்சல்கள், உறக்கமில்லா இரவுகளைச் சொல்லி மனம் வெதும்பினார். பின்னர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். எனக்காக செபியுங்கள் என்று வணங்கினார். பின்னர் படுக்கையில் சாய்ந்து கொண்டார். ஐயா போய் வருகிறேன் என்று நான் எழுந்தபோது அவர் மீண்டும் கைகூப்பினார். வெளிப்படையாய் உரையாடியதன் மூலம் தன் உள்மனக்காயங்களை அவரே குணப்படுத்திக் கொண்டார் என்றே நான் நம்புகிறேன்.

**திண்டுக்கல் வைரக்கல்:-**

புனித பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதிய திருமடலில் இவ்வாறு கூறுகிறார். "கிறிஸ்துவின் பாடுகளில் நான் பங்கெடுக்க வேண்டும். அவருடைய மரணத்துக்கு ஒப்பாகவும் இறுதியில் அவரோடு உயிர்த்தெழ வேண்டும்". அது போலவே சகோ பங்கிராஸ் அவர்கள் இயேசுவின் திரு இருதய சபையில் கடந்த 48 ஆண்டுகளாக நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் நோயுற்ற தருணத்தில் கிறிஸ்துவினுடைய பாடுகளோடு தன்னையும் இணைத்துக் கொண்டு, அவரது மரணத்திற்கு ஒப்பாகவும், தொடர்ந்து அவரது உயிர்த்தெழுதலில் பங்கேற்கிறார். மலையை விட்டு இறங்கும் நீரோடையானது ஆறு, நிலம் எனப் பாய்ந்து விட்டு, இறுதியில் அது கடலிலே கலக்கின்ற வரை அது ஓடிக்கொண்டே இருப்பதைப் போல, சகோதரரது நீண்ட நெடிய பயணம் இருந்தது. இவருடைய பயணம் கிறிஸ்துவுக்கான பயணம், சகோதரத்துவத்திற்கான பயணம், ஏழை எளியோருக்கான பயணமாக இருந்தது. மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் 2026 ஏப்ரல் 16 நள்ளிரவில் இயேசுவின் இதயத்தில் துயில்கொண்டார். மறுநாள் அவரது உடல் ஜீவ ஜோதி இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது. 18 ஆம் தேதி காலை 07:00 மணிக்கு மோட்சவிளக்குத் திருப்பலி நடைபெற்றது. பின்னர் விண்ணக கூடாரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

**திண்டுக்கல்லில் பிறந்தார் - இதய
சபையில் மூலைக்கல்லாய் வாழ்ந்தார்
வைரக்கல்லாய் விண்ணகம் சென்றுவிட்டார்.**

- சகோ **D. கஸ்பார்** தி.இ.ச.,

# MAY

## HAPPY BIRTHDAY

04 **Bro. A. Solomon Raja**
05 **Bro. A. Innasi Inigo**
06 **Bro. A. Joseph Arul Raj**
07 **Bro. L. Franklin Mathew**
10 **Bro. P. Prakash**
15 **Bro. A. Victordass**
16 **Bro. S. Thomas Robert Edward**
25 **Bro. C. Jayakumar**
31 **Bro. A. Sahaya Jaya Kumar**
31 **Bro. A. Vincent Paul**

## Happy Feast

19 **Br. R. Abraham**
24 **Br. C. Sagayaraj**

## Departed

03 **Bro. J. Irudayadasan**
05 **Bro. S. Lawrence**
11 **Bro. T.M. Soosai**
12 **Bro. G. Savarianandan**
17 **Bro. A. Antony Savarimuthu**
18 **Bro. R. Mathias**
19 **Bro. K. J. John Karimpanil**
20 **Bro. D.Maria Pragasam**
20 **Bro. S. Maria Arockiam**
22 **Bro. A. Lourdusamy**
22 **Bro. N.A. Joseph Arockiam**
24 **Bro. S. Raphael**
27 **Bro. M. Devasagayam**
31 **Bro. R. Aloysius**
31 **Bro. M. Lawrence**



O Blessed Virgin Mary, gentle Queen of May,
Clothed in light and crowned with flowers,
You walk among our wounded world,
Pouring grace through fragile hours;
In every heart that seeks for hope,
Your quiet love still softly stays.

When wars arise and nations tremble,
When truth grows dim and fear takes place,
You stand as calm amid the storm,
A refuge of enduring grace;
Gather your scattered children, Mother,
And lead them back to love's embrace.

For the poor who weep in silence,
For the broken, lost, and small,
For those crushed beneath injustice,
Who feel unseen, unheard by all
Be their comfort, strength, and shelter,
A living hope that will not fall.

Teach us your humble, faithful "Yes,"
When doubt and darkness cloud our way;
Guide our hearts to choose what's right,
To walk in truth and not to stray;
Form in us a love like yours,
That shines with Christ both night and day.

O Mother, Star of peace and mercy,
Lead us to your Son above;
Renew the earth, our common home,
With justice, unity, and love;
Till all creation sings as one,
In God's eternal light and love.

-Br. **A. Arulsamy** SHJ.,

## Prayer to St. Joseph



St. Joseph, by the work of your hands and the sweat of your brow, you supported Jesus and Mary, and had the Son of God as your fellow worker. Teach me to work as you did, with patience and perseverance, for God and for those whom God has given me to support.

Teach me to see in my fellow workers the Christ who desires to be in them, that I may always be charitable and forbearing towards all. Grant me to look upon work with the eyes of faith, so that I shall recognize in it my share in God's own creative activity and in Christ's work of our redemption, and so take pride in it.

When it is pleasant and productive, remind me to give thanks to God for it. And when it is burdensome, teach me to offer it to God, in reparation for my sins and the sins of the world.

O good father St. Joseph! I beg you, by all your sufferings, sorrows and joys, to obtain for me what I ask.

(MENTION YOUR PETITION)

Obtain for all those who have asked my prayers, everything that is useful to them in the plan of God. Be near to me in my last moments that I may eternally sing the praises of JESUS, MARY and JOSEPH.

*Amen.*



to Caussanel Province e-mail ID on or before **25 of every month.**

**CAUSSANEL PROVINCIALATE**
Suhalayam, Irudayakulam, Tirunelveli District
Phone : 04634 221448 / Mobile : 8754346175
Email : caussanelprovince@gmail.com
Website : www.caussanelprovince.com